DEPOSITION OF WITNESS

(In the Court of the Principal District Munsif, Sankarankovil )

**O.S.No.37/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : மெய்யப்பன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 16.02.2024 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 16th February 2024.

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 3 ம் வாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 29.04.1998 தேதியிட்ட 1 முதல் 3 வாதிகளின் தந்தை மலையாண்டிக்கோனார் என்பவர் கிருஷ்ணக்கோனார் வகையறாவிடமிருந்து பெற்ற கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 19.08.1999 தேதியிட்ட குருசாமிக்கோனார் என்பவர் மலையாண்டிக்கோனர் என்பவரிடமிருந்து பெற்ற கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 10.04.2014 தேதியிட்ட பிரதிவாதி மாடசாமி என்பவரிடமிருந்து பெற்ற கிரைய ஆவணம் சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 12.07.2016 தேதியிட்ட பிரதிவாதி மாடசாமி என்பவரிடமிருந்து பெற்ற சீர்திருத்த கிரைய ஆவணம் சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 07.04.2015 தேதியிட்ட சங்கரன்கோவில் துணை தாசில்தார் வழங்கிய நத்தம் நிலவரி துயசிட்டா சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** புஞ்சை சர்வே எண்.401 ன் உட்பிரிவுகளை காட்டக்5 கூடிய வரைபடம் சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**7.** நத்தம் வரைபடம் சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**8.** வாதிகள் பெயரில் உள்ள கணினி பட்டா, பட்டா எண்.4618 தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**9.** 09.02.2016, 07.02.2018 ஆகிய தேதியிட்ட சங்கரன்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து 5 ம் வாதிக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பு அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**10.** 23.04.2016, 29.09.2017 தேதியிட்ட கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் இருந்து 5 ம் வாதிக்கு கொடுக்கப்பட்ட மனு ரசீதுகள் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**11.** குருசாமி கோனார் பேரில் உள்ள கணினி பட்டா, பட்டா எண்.219 தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**12.** பிராது மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1 ஆகவும்**, நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் **நீ.ம.சா.ஆ.2 ஆகவும்**, சர்வேயர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.3 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது.

(வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களில் வா.சா.1 தரப்பினர் இல்லை என்பதாலும், மேற்படி ஆவணங்களை வா.சா.1 மூலம் குறியீடு செய்யஇயலாது என்ற பிரதிவாதிதரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் சார்பதிவாளர் ஆவணம் என்பதாலும், மேற்படி ஆவணங்கள் பொது ஆவணங்கள் என்பதாலும், பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணம் என்பதாலும், மேற்படி ஆவணங்கள் பிரதிவாதியின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடுசெய்யப்படுகிறது).

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கில் நாங்கள் கோரும் பரிகாரம் வழங்கிடப் பிரார்த்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**